## 12th Geography Lesson 2 Questions in Tamil

## 2] மனிதக்குடியிருப்புகள்

1. குடியிருப்பு என்பது கீழ்க்கண்டவற்றுள் எதனை உள்ளடக்கியது?

i ) நாம் வாழக்கூடிய அல்லது பயன்படுத்தக்கூடிய கட்டிடங்கள் மற்றும் பயணம் செய்யும் தெருக்கள்

ii ) வேட்டைக்காரர்கள் மற்றும் மேய்ச்சல் காரர்களின் தற்காலிக முகாம்கள்

iii ) சில வசிப்பிடங்களை கொண்ட குக்கிராமங்கள்

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

2) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆப்பிரிக்காவின் பெரும் பிளவுப் பள்ளத்தாக்குப் பகுதியில் மனிதர்கள் தோன்றினர் என்று பெரும்பாலான மானுடவியலாளர்கள் நம்புகிறார்கள்.

(ii) அங்கிருந்து அவர்கள் மத்திய கிழக்கு ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் ஓசியானிவிற்குப் பரவினர்.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

3) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) புதிய கற்காலப்புரட்சி (விவசாயப்புரட்சி) அல்ஜீரியாவில் தோன்றியது.

ii ) வேட்டையாடுபவர்களாகவும், உணவு சேகரிப்பவர்களாகவும், நாடோடிகளாகவும் இருந்த மக்கள் விலங்குகளை வீட்டு விலங்குகளாகப் பழக்கப்படுத்துபவர்களாக மாறினர்.

iii ) மக்கள் தொகை விரைவாக வளர்ச்சி அடைந்தது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

4) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) பெரும்பாலும் நைல், கங்கை, யாங்சிகியாங் ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் விவசாயம் செழிப்படைந்தது.

ii ) ஆண்டுதோறும் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக மண் வளம் மிகுந்திருந்ததால் அறுவடை மிகுதியாகக் காணப்பட்டது.

iii ) உலகின் முதல் நகரங்கள் இப்பகுதிகளில் தோன்றின.

iv ) மதகுருக்கள், உரை எழுதுபவர்கள், கட்டிடக் கலைஞர்கள், விவசாயிகள், வீரர்கள், வணிகர்கள் மற்றும் கொல்லர்கள் ஆகியோர் இ ப்பகுதிக்கு அப்பால் குடியேறினர்.

a) i ), ii ), iii ), iv )

b) i ), ii ), iii )

c) ii ), iii ), iv )

d) iii ), iv )

5) தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) ஒரு குடியிருப்பின் தலம் அது அமைந்துள்ள இடத்தின் இயற்கையமைப்பை விவரிக்கிறது.

ii ) நீர் அளிப்பு, கட்டுமானப் பொருட்கள், மண்ணின் தரம், காலநிலை, இருப்பிடம் மற்றும் பாதுகாப்பு போன்ற காரணங்களைக் கருத்தில் கொண்டே குடியிருப்புகள் முதலில் உருவாகின.

iii ) ஆஸ்திரேலியாவிலுள்ள சிட்னி நகரத்தின் தலம் அங்குள்ள இயற்கைத் துறைமுகம் மற்றும் சுற்றியுள்ள வளமான விவசாய நிலத்தைச் சாதகமாக பயன்படுத்தியுள்ளது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

6) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) குடியிருப்பின் அமைவிடத்தைத் தீர்மானிக்கும் இரண்டு முக்கியக் காரணிகள் தோற்றம் (Aspect) மற்றும் தங்குமிடம்.

ii ) தோற்றம் என்பது நிலம் அமைந்திருக்கும் திசையோடு தொடர்புடையது.

iii ) வட அரைக்கோளத்தில் வடக்கு நோக்கிய சரிவுகள்தான் குடியிருப்புகள் அமைய சிறந்தது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

7) தங்குமிடம் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) குறிப்பாக ஐக்கிய நாடுகளில் (UK) வீசும் குளிர்ந்த வடக்குக் காற்றுகள் மற்றும் தென்மேற்குக் காற்றுகள் ஆகியவற்றிலிருந்து காத்துக்கொள்ளப் பாதுகாப்பான தங்குமிடம் அவசியம்.

ii ) இயற்கைச் சூழல்களினாலேயே பாதுகாக்கப்படும் குடியிருப்புகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு வட மற்றும் தெற்கு டவுன்ஸ் (Downs) பகுதியிலுள்ள சுண்ணாம்புப் பாறையின் வன்சரிவுகளை அடிப்படையாகக் கொண்ட ஸ் ட்ரைட் லைன் குடியிருப்புகளாகும்.

winmeen.com

iii) இக்குடியிருப்புகள் சிறந்த நீர் ஆதாரத்தினாலும் அருகிலுள்ள வளமான வேளாண் நிலத்தினாலும் பயனடைந்திருக்கின்றன.

a) i), ii), iii)

b) i), ii)

c) ii), iii)

d) i), iii)

8) நீர் அளிப்பு தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i) ஒரு குடியிருப்பு அமையவேண்டும் என்று தீர்மானிப்பதில் நீர் அளிப்பு மிக முக்கியமான காரணியாகும்.

ii) ஆறுகள் தூய குடிநீர் அளிப்பதோடு மட்டுமல்லாமல் மீன் பிடித்தல் மூலம் உணவு ஆதாரமாகவும் மற்றும் போக்குவரத்து வழியாகவும் உள்ளன.

iii) உலகின் மிகப்பெரிய நகரங்களில் பெரும்பாலானவை ஆறுகளின் கரையோரங்களில் அமைந்திருக்கவில்லை.

a) i), ii), iii)

b) i), ii)

c) ii), iii)

d) i), iii)

9) ஏலி (Ely) என்ற இடம் கீழ்க்கண்ட எதனோடு தொடர்புடையது?

a) நீர்பிடிப்பு பகுதி

b) கடலோரப்பகுதி

c) நீர் நிலையை ஒட்டிய இடங்கள்

d) வறண்ட இடம்

10) ஸ்ப்ரிங் லைன் குடியிருப்புக்கள் பின்வரும் எதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்?

a) நீர்பிடிப்பு பகுதி

b) கடலோரப்பகுதி

c) நீர் நிலையை ஒட்டிய இடங்கள்

d) வறண்ட இடம்

11) பாதுகாப்பு தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i) இடைக்காலத்தில் பாதுகாப்பு என்பது குடியிருப்பின் தலத்தை நிர்ணயிக்கும் காரணிகளில் மிக முக்கியமான ஒன்றாக இருந்தது.

ii) ஓரிடத்தின் நிலத்தோற்றமே மிகச் சிறந்த பாதுகாப்பு அம்சமாக இருந்தது என நிரூபிக்கப்பட்டுள்ளது.

iii) எடின்பர்க் கோட்டை ஒரு கடல் பகுதியின் உச்சியிலமைந்துள்ளது.

a) i), ii), iii)

b) i), ii)

c) ii), iii)

d) i), iii)

12) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i) எதிரிகளுக்கு சிறிதும் இடம் கொடுக்கா வண்ணம், தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் மிகச் சரியான நிலையில் அமைந்துள்ளது.

ii) அமெரிக்காவில் ஏராளமான குன்றின் மேல் சுற்றுச்சுவர் எழுப்பப் பட்ட கிராமங்கள் உள்ளன.

iii) நியூசிலாந்தில் உள்ள மாவோரிஸ் (Maoris) மக்கள் தங்கள் குடியிருப்புகளை ('பா' (pa's) என்றழைக்கப்படுவது) தாக்குதலுக்கு ஆளாகாதவாறு செங்குத்தான குன்றுகளின்மேல் அமைத்துள்ளனர்.

a) i), ii), iii)

b) i), ii)

c) ii), iii)

d) i), iii)

13) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) ஷ்ரூஸ்பரி மற்றும் டர்ஹாம் ஆகிய நகரங்கள் ஆற்று வளைவினால் (Meander) உருவாக்கப்பட்ட நிலப்பரப்பில் அமைந்து, மூன்று புறமும் நீரால் சூழப்பட்டுள்ளது.

(ii) இது அவர்கள் பாதுகாக்க வேண்டிய ஒரு மெல்லிய கழுத்துப்பகுதி போன்ற நிலமே ஆதலால் இரு நகரங்களுக்கும் மிகச் சிறந்த பாதுகாப்பை அளிக்கிறது.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

14) வளங்கள் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i) ஆரம்பகாலத்தில் குடியிருந்தவர்களுக்கு மிக முக்கியமான வளங்களாக இருந்தவை எரிபொருள், கட்டுமானப் பொருட்கள் மற்றும் உணவு.

ii) மரங்கள் எங்கு அதிகம் கிடைத்தனவோ அங்கு குடியிருப்புகள் வளர்ச்சியடைந்தன.

iii) குடியிருப்பின் ஆரம்ப காலங்களிலிருந்தே நகர்ப்புறங்கள் வளர்ச்சியடைய பலவிதமான வளங்கள் மையப்புள்ளிகளாக இருந்துள்ளன.

a) i), ii), iii)

b) i), ii)

c) ii), iii)

d) i), iii)

15) பின்வருவனவற்றுள் தவறான இணையைத் தேர்ந்தெடு.

a) தெற்குவேல்ஸ் – நிலக்கரிச் சுரங்கங்கள்

b) கார்ன்வால் – தகரச் சுரங்கங்கள்

c) காரஜாஸ் – பெரிய சுரங்கத் திட்டங்கள்

d) சான் பிரான்ஸிஸ்கோ – இயற்கை எரிவாயு

16) 'தங்கத்திற்கான ஓட்டத்திற்கு' (Gold rush) பிறகு தங்கத்தின் கண்டுபிடிப்பினால் வளர்ச்சியடைந்த மிகவும் பிரசித்தி பெற்ற குடியிருப்பு எது?

a) தெற்குவேல்ஸ்
b) கார்ன்வால்
c) காரஜாஸ்
d) சான் பிரான்ஸிஸ்கோ

17) பாதை மையங்கள் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு
i ) பாதை மையங்கள், சந்திக்கும் புள்ளிகள்ளனவும் அழைக்கப்படுகின்றன.
ii ) இரண்டு பள்ளத்தாக்குகள் சந்திப்பதால் ஏற்படுகின்றன.
iii ) ஐக்கிய நாடுகளில் பார்க் பாதை மையத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.
a) i ), ii ), iii )
b) i ), ii )
c) ii ), iii )
d) i ), iii )

18) தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு
i ) பர்மிங்ஹாம் பல சாலைகள் சந்திக்கும் மிகச் சிறந்த இடத்தில் அமைந்துள்ளது.
ii ) இதுவே அதன் வளர்ச்சிக்கு முக்கியக் காரணமாகும்.
iii ) இது ஐக்கிய நாடுகளின் மிக சிறிய நகரங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.
a) i ), ii ), iii )
b) i ), ii )
c) ii ), iii )
d) i ), iii )

19) தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு
i ) எங்கு பெரிய ஆறுகளை மிக எளிதாகக் கடக்க முடிந்ததோ அம்மையங்களில் பல நகரங்களும் மாநகரங்களும் வளர்ச்சியடைந்துள்ளன.
ii ) எக்ஸெட்டர் இங்கிலாந்தில் எக்ஸே ஆற்றின் குறுக்கே அமைந்துள்ளது.
iii ) இணைப்பு மையத்திற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளில் ஒன்று இங்கிலாந்து நாட்டின் இலண்டன் நகரமாகும்.
a) i ), ii ), iii )
b) i ), ii )
c) ii ), iii )
d) i ), iii )

20) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு
i ) சீன் ஆற்றின் மத்தியிலுள்ள நோட்ரேடேன் என்னும் சிறிய தீவில்தான் முதல் நகரம் அமைக்கப்பட்டது.
ii ) ஆற்றின் குறுக்கே நீண்ட பெரிய பாலம் ஒன்று கட்டுவதற்கு பதிலாக இரண்டு சிறிய பாலங்கள் கட்ட இந்தத் தீவு உதவியது.
iii ) இங்குதான் நோட்ரேடேன் கதீட்ரல் (Notre Dame cathedral) தேவாலயம் கட்டப்பட்டுள்ளது.
a) i ), ii ), iii )
b) i ), ii )
c) ii ), iii )
d) i ), iii )

21) ஆறுகளின் சங்கமம் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு
i ) இரண்டு பள்ளத்தாக்குகள் அல்லது சாலைகள் எவ்வாறு குடியிருப்பின் வளர்ச்சிக்கு சந்திப்புப் புள்ளிகளாக இருக்கின்றனவோ அதுபோல இரண்டு ஆறுகள் இணையும் இடங்களும் அமைகின்றன.
ii ) இத்தாலி நாட்டில் நீல மற்றும் வெள்ளை நைல் நதிகள் சந்திக்குமிடத்தில் அமைந்துள்ள கார்ட்டூம் (Khartoum) ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.
iii ) இந்தியாவில் கங்கையும், யமுனையும் கூடுமிடத்தில் அலகாபாத் அமைந்துள்ளது.
iv ) பவானி நகரம் (தமிழ்நாடு) காவேரியும், பவானியும் சந்திக்குமிடத்தில் அமைந்துள்ளது.
a) i ), iii ), iv )
b) i ), ii ), iii )
c) ii ), iii ), iv )
d) iii ), iv )

22) சூழலமைவு தொடர்பான கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு
(i) ஒரு குடியிருப்பு மற்ற குடியிருப்புகளோடும், இயற்கை நிலத்தோற்றங்களோடும் கொண்டுள்ள தொடர்பை விளக்குவதே குடியிருப்பின் சூழலமைவு எனப்படும்.
(ii) ஒரு குடியிருப்பு பெரிய நகரமாக மாறுகிறதா அல்லது சிறிய நகரம் அல்லது கிராமமாகவே இருக்கிறதா என்பதை முடிவு செய்யும் காரணிகளில் மிக முக்கியமானது குடியிருப்பின் சூழலமைவாகும்.
a) (i) மற்றும் (ii) சரி
b) (i) மற்றும் (ii) தவறு
c) (i) சரி (ii) தவறு
d) (i) தவறு (ii) சரி

23) பர்மிங்ஹாம் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு
i ) ஐக்கிய நாடுகளில் பர்மிங்ஹாம் மிகச்சிறந்த சூழலமைவு கொண்ட நகரத்திற்கு எடுத்துக்காட்டாகும்.
ii ) இது நாட்டின் மத்தியில் அமைந்துள்ளதோடு அருமையான சாலை வழிகளால் வடக்கு மற்றும் தெற்கு இலண்டன் மாநகரத்தோடு இணைக்கப்பட்டுள்ளது.
iii ) நகரங்கள் பல்வேறு செயல்பாடுகளை நிறைவேற்றாதபோது அதன் முக்கியத்துவம் கூடவோ குறையவோ செய்யும்.
a) i ), ii ), iii )
b) i ), ii )
c) ii ), iii )
d) i ), iii )

24) சூழலமைவு தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) உண்மையான குடியிருப்பின் இடத்தைக் குறிக்கிறது.

ii ) ஒரு குடியிருப்புக்கான தலத்தை முதலில் தேர்ந்தெடுப்பது என்பது அதன் அன்றாடத் தேவைகளான நீர் அளிப்பு, வேளாண் திறன் மிக்க நிலம், கட்டுமானப் பொருட்கள் மற்றும் எரிபொருட்கள் ஆகியவற்றைச் சார்ந்தது.

iii ) குடியிருப்புகளை 3 வகைகளாகப் பிரிக்கலாம்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

25) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) கிராமத்திற்கும், நகரத்திற்குமிடையேயுள்ள மிகப்பெரிய வேறுபாடுஅதன் செயல்பாடாகும்.

ii ) நகர்ப்புறத்தில் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலைத் தொழில்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளும் சேவை செய்யும் துறைகளும் காணப்படுகின்றன

iii ) பொதுவாக நகர்ப்புறங்களைவிட கிராமப்புறங்களில் மக்களடர்த்தி குறைவாக உள்ளது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

26) கீழ்க்கண்டவற்றுள் நகர்ப்புறக் குடியிருப்புகளை வரையறை செய்பவை எவை?

i ) மேம்பட்ட குடியிருப்பு வசதிகள்

ii ) கல்விக்கான வாய்ப்புகள்

iii ) போக்குவரத்து வசதிகள்

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

27) தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) கிராமப்புற சமூகங்களில் வேலை வாய்ப்பு சார்ந்த இடம்பெயர்வுக்கு மிகக் குறைந்த வாய்ப்பே உள்ளது.

ii ) நகர்ப்புறத்தில் ஏராளமான பணிகள் உள்ளதால் பணி நிமித்தமான இடப்பெயர்வு அதிகமாக உள்ளது.

iii ) கிராமப்புற மக்கள் குறைந்த அளவே இடம்பெயர்ந்து செல்வதால் அவர்களுக்கிடையிலான சமூக உறவு சம்பிரதாயமாக (Formal) இருக்கும்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

28) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) கிராமப்புறக் குடியிருப்புகள் நேரியல், செவ்வக, வட்ட, நட்சத்திர வடிவ கிராமம், T – வடிவ கிராமம், Y – வடிவ கிராமம், நெருக்கமான, சிதறிய, திட்டமிட்ட கிராமம் என வகைப்படுத்தப்பட்டுள்ளன

(ii) ஒரு சாலை, இருப்புப்பாதை, ஆறு, பள்ளத்தாக்கின் சரிவு அல்லது தடுப்பணை ஆகியவற்றிற்கு அருகில் கட்டப்பட்ட வீடுகளின் தொகுப்பு எதிரியல் வகைக் குடியிருப்பு எனப்படும்.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

29) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) செவ்வக வடிவில் கட்டப்படும் குடியிருப்புகள் செவ்வக வகைக் குடியிருப்பு எனப்படும்.

(ii) செவ்வக வகைக் குடியிருப்புகள் கடற்கரைப்பகுதிகள் மற்றும் ஆறுகளுக்கிடையே உள்ள தீவுகளில் காணப்படுகின்றன.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

30) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) வட்ட வடிவில் கட்டப்பட்ட குடியிருப்புகள் வட்ட வடிவக் குடியிருப்பு என்று அறியப்படும்.

(ii) இவ்வகையான குடியிருப்புகள் சமவெளிப்பகுதிகள் மற்றும் மலைகளுக்கிடையே உள்ள பள்ளத்தாக்குகளில் காணப்படுகின்றன.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

31) க்ரால் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) கால்நடைகளை அடைத்து வைக்கும் இடங்களைச் சுற்றி அமைந்திருக்கும் வீடுகளின் தொகுப்பு க்ரால் (Kraal) எனப்படும்

ii ) இத்தகைய அமைப்புகளைக் கொண்ட சமூக அலகு அமெரிக்கா, குறிப்பாக தென் அமெரிக்க மக்களின் வாழ்க்கை முறை எவ்வாறு க்ராலுடன் தொடர்புடையது என்பதை விளக்க இவ்வார்த்தை பயன்படுத்தப்படுகிறது.

iii ) க்ராலின் தலைவர் தனது பல மனைவிகளின் வீடுகளோடு கூடிய உடைமைக்கு பாதுகாவலராக இருப்பார்.

a) i ), ii ), iii )
b) i ), ii )
c) ii ), iii )
d) i ), iii )

32) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு
(i) சாலைகளின் முச்சந்திகளில் கட்டப்பட்ட குடியிருப்புகள் Y வடிவம் கொண்ட குடியிருப்புகள் ஆகும்.
(ii) ஒரு சாலை மற்றொரு சாலை முடியுமிடத்தில் அதனைச் சந்திக்கும் வழியில் அமைந்துள்ள குடியிருப்புகள் T வடிவக் குடியிருப்புகள் ஆகும்.
a) (i) மற்றும் (ii) சரி
b) (i) மற்றும் (ii) தவறு
c) (i) சரி (ii) தவறு
d) (i) தவறு (ii) சரி

33) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு
(i) நெருக்கமான குடியிருப்புகளில் வீடுகள் அருகருகே அமைந்துள்ளன.
(ii) வளமையான சமவெளிப்பகுதிகள் இத்தகைய நெருக்கமான அல்லது குழுமிய குடியிருப்புகளைக் கொண்டுள்ளன.
a) (i) மற்றும் (ii) சரி
b) (i) மற்றும் (ii) தவறு
c) (i) சரி (ii) தவறு
d) (i) தவறு (ii) சரி

34) சிதறிய குடியிப்புகள் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு
i ) இவ்வகைக் குடியிருப்புகளில் வீடுகள் இடைவெளி விட்டுக் காணப்படுவதுடன் வயல்வெளிகளோடு கலந்திருக்கும்.
ii ) சந்தை மற்றும் பிற செயல்பாடுகள் மையப்படுத்தப்பட்டு இருப்பினும் மக்கள் பங்கெடுப்பதில்லை.
a) (i) மற்றும் (ii) சரி
b) (i) மற்றும் (ii) தவறு
c) (i) சரி (ii) தவறு
d) (i) தவறு (ii) சரி

35) நகர்ப்புறக் குடியிருப்பு கீழ்க்கண்டவற்றுள் இவற்றை உள்ளடக்கியது?
i ) மாநகராட்சி
ii ) நகராட்சி
iii ) இராணுவக்குடியிருப்பு வாரியம்
iv ) அறிவிக்கப்பட்ட நகர்ப்புறக் குழு
a) i ), ii ), iii ), iv )
b) i ), ii ), iii )
c) ii ), iii ), iv )
d) iii ), iv )

36) நகர்ப்புறக் குடியிருப்புகளின் பரிணாமம் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு
i ) பொ.ஆ.1810ல் 1 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்டிருந்த நியூயார்க் மாநகரமே முதல் நகரக் குடியிருப்பாகும்.
ii ) 1982ல் உலகில் ஏறக்குறைய 175 நகரங்கள் 1 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட நகரங்களாகும்.
iii ) 1800ஆம் ஆண்டில் உலகின் 3 சதவீத மக்களே நகர்ப்புறக் குடியிருப்புகளில் வாழ்ந்தனர்.
a) i ), ii ), iii )
b) i ), ii )
c) ii ), iii )
d) i ), iii )

37) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு
i ) அளவு மற்றும் கிடைக்கப்பெறும் சேவைகள் மற்றும் அளிக்கப்படும் செயல்பாடுகள் ஆகியவற்றைப் பொருத்து நகர்ப்புறமையங்கள் நகரம், மாநகரம் மில்லியன் நகரம், இணைந்த நகரம், மீப்பெருநகர் என அழைக்கப்படுகின்றன.
ii ) கிராமத்திற்கும் நகரத்திற்குமுள்ள செயல்பாட்டு முரண்பாடுகள் எப்போதும் தெளிவாக இருக்கின்றன.
iii ) குறிப்பிட்ட செயல்பாடுகளான உற்பத்தித் தொழில், சில்லறை மற்றும் மொத்த வியாபாரம் மற்றும் தொழில்சார் சேவைகள் போன்றவை நகரங்களில் காணப்படுகின்றன.
a) i ), ii ), iii )
b) i ), ii )
c) ii ), iii )
d) i ), iii )

38) கீழ்க்கண்டவற்றுள் தவறானவற்றை தேர்ந்தெடு
i ) மாநகரங்கள் மில்லியன் நகரங்களைக் காட்டிலும் அளவில் பெரியதாகவும், பொருளாதாரச் செயல்பாடுகளை அதிக எண்ணிக்கையில் கொண்டதாகவும் இருக்கின்றன.
ii ) இவை போக்குவரத்து முனையங்களையும், பெரிய நிதி நிறுவனங்களையும் வட்டார நிர்வாக அலுவலகங்களையும் கொண்டுள்ளன.
iii ) மக்கள் தொகை 10 மில்லியனைக் கடந்து விட்டால் இது மில்லியன் நகரம் என அழைக்கப்படுகிறது.
a) i ), ii ), iii )
b) i ), ii )
c) ii ), iii )
d) i ), iii )

39) திருப்பூர் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு
i ) நொய்யல் ஆற்றங்கரையில் சராசரியாக 295 மீட்டர் (967அடி) உயரத்தில் அமைந்துள்ளது.
ii ) திருப்பூர் ஒரு நீர்ப்பாசனம் பெறும் வேளாண் நகரமாக இருந்தது.

winmeen.com

iii) 1870களில் விவசாயிகள் ஜவுளித் தொழிலோடு தொடர்புடைய பிரிவுகளுக்குச் சொந்தக்காரர்கள் ஆயினர்.

a) i ), ii ), iii)

b) i ), ii )

c) ii ), iii)

d) i ), iii)

40) கீழ்க்கண்டவற்றுள் தவறானவற்றை தேர்ந்தெடு

i ) ஆக்ஸ்போர்டு பொருளாதாரம் நடத்திய அண்மைக்கால ஆய்வுகளிலிருந்து உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் மாநகரங்களில் இந்திய மாநகரங்கள் முதல் 100 இடங்களைப் பிடித்துள்ளன என்று தெரிய வருகிறது.

ii ) இந்தியாவில் திருப்பூர் மிக வேகமாக வளர்ந்து வரும் மாநகரங்களில் 6வது இடத்தைப் பிடித்துள்ளது.

iii) அதைத் தொடர்ந்து திரு நெல்வேலியும், சென்னையும் உள்ளன.

a) i ), ii ), iii)

b) i ), ii )

c) ii ), iii)

d) i ), iii)

41) இணைந்த நகரம் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) இணைந்த நகரம் (Conurbation) என்ற சொல் பற்றி பேட்ரிக் கேட்ஸ் (Patrick Geddes) என்பவரால் 1915ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

ii ) உண்மையில் தனித்தனிப் பிரிவுகளாக இருந்த நகரங்கள் அல்லது மாநகரங்கள் இணைந்து அதன் மூலம் நகர வளர்ச்சி பெற்ற பெரும்பகுதியைக் குறிக்க இச்சொல்லை அவர் பயன்படுத்தினார்.

iii) இந்தியாவில் மும்பை மற்றும் பனாஜி ஆகியவை இணைந்த நகரங்களுக்கு உதாரணங்களாகும்.

a) i ), ii ), iii)

b) i ), ii )

c) ii ), iii)

d) i ), iii)

42) மீப்பெரு நகர் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) மீப்பெரு நகர் Megalopolis (10 மில்லியனுக்கும் மேலான மக்கள் தொகை) 'பெரிய நகரம்' என்னும் பொருள் கொண்ட மெகாலோபோலிஸ் என்ற கிரேக்க வார்த்தை ஜீன்காட் மேன் (Jean Gott man – 1957) என்பவரால் பிரபலமானது.

ii ) இது இணைந்த நகரங்கள் சேர்வதால் பரந்து விரிந்த 'பெரிய பெரு நகரப் பகுதியை குறிக்கிறது' (Super metro politan).

iii) ரஷ்ய நாட்டில் வடக்கில் பாஸ்டன் முதல் தெற்கில் மாஸ்கோ வரையுள்ள நகர்ப்புற நிலப்பகுதி மீப்பெரு நகருக்கு சிறந்த உதாரணமாகும்.

a) i ), ii ), iii)

b) i ), ii )

c) ii ), iii)

d) i ), iii)

43) மில்லியன் நகரம் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) 1 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நகரம் மில்லியன் நகரம் எனப்படும்.

ii ) நியூயார்க் மாநகரமானது 1800ல் மில்லியன் நகரமானது.

iii) ஒவ்வொரு 30ஆண்டுகளுக்கும் மில்லியன் நகரங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் வீதம் மூன்று மடங்காக இருந்துள்ளது.

a) i ), ii ), iii)

b) i ), ii )

c) ii ), iii)

d) i ), iii)

44) நகர்ப்புற ஒருங்கிணைப்பு தொடர்பான கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) நகர்ப்புற ஒருங்கிணைப்பில் ஒரு மைய நகரமோ அல்லது ஒருங்கிணைப்பில் அங்கம் வகிக்கும் நகரங்களில் குறைந்தது ஒன்றாவது அங்கீகரிக்கப்பட்ட நகரமாக இருக்க வேண்டும்.

(ii) ஒருங்கிணைப்பிலுள்ள அனைத்து நகரங்களின் மொத்தமக்கள் 20,000க்குக்குறையாமல் (1991 கணக்கீடு) இருக்க வேண்டும் என்று 2001ஆம் ஆண்டு கணக்கீட்டின்படி முடிவெடுக்கப்பட்டது.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

45) நகர்ப்புற ஒருங்கிணைப்பு தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் தவறானவற்றை தேர்ந்தெடு

i ) நகர்ப்புற ஒருங்கிணைப்பு என்பது தொடர்ச்சி யற்ற நகர்ப்புற பரவலாகும்.

ii ) ஒரு நகரம் அல்லது அதனுடன் இணைந்த நகரத்தின் வெளிப்புற வளர்ச்சி அல்லது 2 அல்லது அதற்கு மேல் வெளிப்படையாகத் தெரியும் தொடர் நகரங்களின் தொகுப்பு மற்றும் அந்நகரங்களோடு இணைந்த நகரத்தின் வெளிப்புற வளர்ச்சியே நகர்ப்புற ஒருங்கிணைப்பாகும்.

iii) வெளிப்புற வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டுகள் இரயில்வே குடியிருப்புகள், பல்கலைக்கழக வளாகங்கள், துறைமுகப் பகுதி, இராணுவ முகாம்கள் போன்றவையாகும்.

a) i ) மட்டும்

b) i ), ii )

c) ii ) மட்டும்

d) i ), iii)

46) நகர்ப்புற ஒருங்கிணைப்பு ஏற்படக் காரணமாய் இருக்கும் வேறுபட்ட சூழ்நிலைகளை தேர்ந்தெடு.

winmeen.com

i ) தொடர்ச்சியான வெளிப்புற வளர்ச்சி கொண்ட ஒரு மாநகரம் அல்லது நகரம்.

ii ) வெளிப்புற வளர்ச்சி கொண்ட அல்லது வெளிப்புற வளர்ச்சி இல்லாத ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இணைந்த நகரங்கள்.

iii ) தொடர்ச்சியான பரவலை ஏற்படுத்தக்கூடிய ஒரு மாநகரம் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இணைந்த நகரங்கள் மற்றும் அதனோடு கூடிய வெளிப்புற வளர்ச்சிகள் அனைத்தும்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

47) நிலையான நகர்ப்புற பகுதி தொடர்பான கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) 1981 மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்காக உருவாக்கப்பட்டது.

(ii) சில நகர்ப்புறத் தகவல்களை அட்டவணைப் படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

48) நிலையான நகர்ப்புற பகுதியின் முக்கிய அம்சங்களைத் தேர்ந்தெடு.

i ) குறைந்தது 50,000 மக்கள் தொகை கொண்ட முக்கிய நகரமாக இருத்தல் வேண்டும்.

ii ) நகர்ப்புற மற்றும் கிராமப்புற நிர்வாகக் குழுக்களைக் கொண்ட தொடர் பகுதிகள் முக்கிய நகரத்தோடு நெருக்கமான, பரஸ்பர, சமூக பொருளாதாரத் தொடர்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

iii ) 2 அல்லது 3 ஆண்டுகளில் இந்த முழுப்பகுதியும் நகரமயமாகலாம்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

49) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) நகரமயமாக்கப்பட்டப் பகுதிக்குத் தேவையான ஒப்பீட்டு தகவல்கள் தொடர்ச்சியாக முப்பது ஆண்டுகளுக்கு வழங்கப்படும் பொழுதுதான் நிலையான நகர்ப்புற பகுதியைப் பற்றிய ஒரு சரியான கருத்து கிடைக்கும்.

ii ) இந்த தெளிவற்ற "நிலையான நகர்ப்புறப் பகுதி" என்ற மாற்றுக் கருத்து 1961 கணக்கெடுப்பில் உருவானது.

iii ) நகரக்குழுக்கள் சுயேச்சையான(independent) நகரப் பகுதிகளைக் கொண்டிருந்தன.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

50) நகரக் குழுக்கள் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) நகரக் குழுக்களுக்கான தகவல்கள் ஒரு கணக்கெடுப்பிலிருந்து மற்றொரு கணக்கெடுப்பிற்கு ஒப்பிட முடியாதவாறு இருந்தது.

ii ) நிலையான நகர்ப்புறப் பகுதி என்ற கருத்து உருவாக்கப்பட்டு 1991 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

51) தொடர்பான கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) உலகமாநகரம் (Ecumeno polis) என்பது உலக முழுமையும் தன்னுள் அடக்கிய ஒரே மாநகரமாகும்.

(ii) எதிர்காலத்தில் இது ஏற்பட வாய்ப்புள்ளது.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

52) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) நகர்ப்புறப் பகுதியின் வரையறையானது அனைத்து நாட்டிற்கும் பொதுவாக காணப்படுகிறது.

(ii) நகர்புறக் குடியிருப்புகளை வகைப்படுத்த சில பொதுவான அடிப்படைகளான மக்கட்தொகையளவு, தொழில் அமைப்பு மற்றும் நிர்வாக அமைப்பு ஆகும்.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

53) மக்கள்தொகையளவு தொடர்பான கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) இந்தியாவில் மக்கள் தொகை அளவு, ஒரு ச.கி. மீட்டருக்கு 400 பேர் என்ற மக்களடர்த்தி, விவசாயமற்ற தொழில் செய்வோரின் பங்கு ஆகியவை கணக்கில்எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

(ii) இந்தியாவில் 70% பொருளாதார உற்பத்தித் திறன் கொண்ட மக்கள் விவசாயமற்ற தொழில்களில் ஈடுபடுதல்.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

54) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) இந்தியாவில் நகராட்சி, இராணுவக் குடியிருப்பு அல்லது அறிவிக்கப்பட்டப் பகுதிக்குழு ஆகியவை எந்த அளவில் இருந்தாலும் அவை நகர்ப்புறம் என்று வரையறுக்கப்படுகிறது.

ii ) நகர்ப்புறக் குடியிருப்பின் செயல்பாடுகளைப் பொறுத்து நகரங்கள் நிர்வாக நகரங்கள், வணிக நகரங்கள், கலாச்சார நகரங்கள், பொழுதுபோக்கு நகரங்கள் மற்றும் தொழில்துறை நகரங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

iii ) நிர்வாக நோக்கத்திற்காக அல்லது நிர்வாகச் செயல்பாட்டிற்காக நிறுவப்பட்ட குடியிருப்புகள் நிர்வாக நகரங்கள் எனப்படுகின்றன.

a) i ), ii ), iii )
b) i ), ii )
c) ii ), iii )
d) i ), iii )

55) பொருத்துக:

A) லாகூர், பாக்தாத் – 1) வேளாண் சந்தை நகரங்கள்
B) மான்செஸ்டர், செயின்ட் லூயிஸ் – 2) நிதி மையங்கள்
C) வின்னிபெக், கான்சாஸ் – 3) உள்நாட்டு மையங்கள்
D) பிராங்க்பர்ட், ஆம்ஸ்டர்டாம் – 4) போக்குவரத்து முனையங்கள்

A) B) C) D)
a) 4 3 1 2
b) 1 2 3 4
c) 3 1 4 2
d) 4 1 2 3

56) தவறான இணையைத் தேர்ந்தேடு.

A) மதுரை – மத நகரம்
B) மியாமி – பொழுதுபோக்கு நகரம்
C) பிட்ஸ்பர்க் – தொழில்துறை நகரம்
D) ஜாம்ஷெட்பூர் – பொழுதுபோக்கு நகரம்

57) மைய மண்டல கோட்பாடு தொடர்பான கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) இந்த கோட்பாடு எர்னெஸ்ட் பர்கேஸ் (Ernest Burgess)என்பவரால் 1925ல் வெளியிடப்பட்டது.

(ii) இவர் மைய மண்டலத்தில் உள்ள ஒரு மையத்திலிருந்து ஒரு சிற்றலையைப் போன்று வெளிப்புறமாக வளர்ச்சியடையும் நகரத்தைப் பற்றி விளக்குகிறார்.

a) (i) மற்றும் (ii) சரி
b) (i) மற்றும் (ii) தவறு
c) (i) சரி (ii) தவறு
d) (i) தவறு (ii) சரி

58) கீழ்க்கண்டவற்றுள் மைய மண்டல கோட் பாட்டு அனுமானங்களை தேர்ந்தெடு.

i ) ஆறுகள் அல்லது குன்றுகள் போன்ற இயற்கைத் தடைகள் இவற்றைக் குறுக்கிடாதவரை ஒரு நகரமானது ஐந்து மைய மண்டலங்கள் அல்லது வளையங்களிலிருந்து வெளிப்புறமாக வளர்ச்சியடைகிறது.

ii ) ஒரு நகரம் ஒரே ஒரு மையத்தைக் கொண்டுள்ளது.

iii ) நகரமானது ஒவ்வொரு மண்டலமாக வெளிப்புறத்தை நோக்கி வேறொரு மண்டலமாக வளர்ச்சியடைகிறது.

a) i ), ii ), iii )
b) i ), ii )
c) ii ), iii )
d) i ), iii )

59) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) மத்திய வணிக மையம் வணிக சமூகத்தின் மையப்பகுதியாகும்.

ii ) இங்கு வணிக, சமூக மற்றும் குடிமை செயல்பாடுகள் குழுமிக் காணப்படுகின்றன.

iii ) மத்திய வணிக மையத்தின் மையப்பகுதி அலுவலகக் கட்டிடங்கள், வணிகக் கடைகள், திரையரங்குகள், உணவகங்கள், வங்கிகள், குடிமை அரசு கட்டிடங்கள் போன்றவற்றைக் கொண்டுள்ளது.

a) i ), ii ), iii )
b) i ), ii )
c) ii ), iii )
d) i ), iii )

60) குடியிருப்பு சிதைவு மண்டலம் என்றழைக்கப்படுவது எது?

i ) மண்டலம் – A
ii ) மண்டலம் – B
iii ) மண்டலம் – C

a) i ) மட்டும்
b) i ), ii )
c) ii ) மட்டும்
d) i ), iii )

61) "குடும்ப குழுக்கள் அதிகமாக காணப்படுகின்றன, குற்ற விகிதங்கள் மிகவும் குறைவாகக் காணப்படுகிறது." இக்கூற்று பின்வரும் எதனோடு தொடர்புடையது?

a) மண்டலம் – A
b) மண்டலம் – B
c) மண்டலம் – C
d) மண்டலம் – D

62) நடுத்தர மற்றும் உயர் வர்க்க குடியிருப்புகளைக் கொண்டுள்ள மண்டலம் எது?

a) மண்டலம் – A
b) மண்டலம் – B
c) மண்டலம் – C
d) மண்டலம் – D

63) பயணிகள் மண்டலம்தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) இந்த மண்டலம் நகரத்துக்கு உள்ளேக் காணப்படுகிறது.

ii ) இது தொடர்ச்சியான குடியிருப்புப் பகுதிகளுக்கு அப்பாலும் காணப்படுகிறது.

iii ) திறந்த வெளியில் காணப்படும் சிறிய கிராமங்கள் நாளடைவில் புற நகர் பகுதிகளாக வளர்ச்சியடைகின்றன.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

64) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) நகரமயமாதல் என்பது கிராமப்புறத்திலிருந்து நகரக் குடியிருப்புகளை நோக்கி மக்கள் இடம் பெயர்ந்து நகர மக்களின் சதவிகிதம் படிப்படியாக அதிகரித்து மாறும் சூழலுக்கு ஏற்ப தங்களை மாற்றிகொள்வது போன்றவற்றைக் குறிப்பதாகும்.

(ii) மையப் பகுதிகளில் வசித்து பணிபுரியும் மக்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் நகரங்களும் மற்றும் மாநகரங்களும் பெரிய அளவில் உருவாகும் ஒரு செயல் முறையே நகரமயமாதல் ஆகும்.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

65) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) நகரம் என வரையறுக்கப்பட்ட பகுதியில் வாழும் மொத்த தேசிய மக்களின் சதவிகிதமே நகரமயமாதலாகும்.

ii ) நகர வளர்ச்சி என்பது நகரம் என வரையறுக்கப்பட்ட பகுதியில் வசிக்கும் மக்களின் அறுதி எண்ணிக்கையாகும்.

iii ) 2008 ஆம் ஆண்டு இறுதியில் உலக மக்கள் தொகையில் பாதிக்கு மேல் நகரப் பகுதியில் வசிப்பார்கள் என உலக வங்கி மதிப்பிட்டுள்ளது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

66) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) 2021ஆம் வருடத்திற்குள் 64 சதவிகித வளரும் நாடுகளும் 86 சதவிகித வளர்ந்த நாடுகளும் நகரமயமாக்கப்படும் என கணிக்கப்பட்டுள்ளது.

ii ) சுதந்திரத்திற்கு பிறகு கலப்புப் பொருளாதாரத்தை ஏற்றுக் கொண்ட பிறகே இந்தியாவில் நகரமயமாதல் துரிதப்படுத்தப்பட்டது.

iii ) கலப்புப் பொருளாதாரம் தனியார் துறை வளர்ச்சிக்கு வித்திட்டது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

67) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) 1901 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி நகரப்பகுதியில் வசிப்போர் 11.4 சதவிகிதமாக இருந்தனர்.

ii ) இது 28.53 சதவிகிதமாக 2001ல் உயர்ந்து 30 சதவிகிதத்தை கடந்து 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 31.16 சதவிகிதத்தில் உள்ளது.

iii ) உலக வங்கி மக்கள் தொகை அறிக்கை 2007 ன் படி 2030க்குள் 40.76 சதவிகித மக்கள் நகரப்பகுதியில் வசிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறார்கள்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

68) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) மும்பை 20ஆம் நூற்றாண்டில் பெரிய அளவிலான கிராமப்புற – நகர்புற இடம்பெயர்தலை கண்டது.

ii ) மும்பை 2018ல் 22.1 மில்லியன் மக்கள்தொகையுடன் இந்தியாவின் மிகப் பெரிய மாநகரமாக விளங்குகிறது.

iii ) 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி அதிவேக நகரமயமாதல் வளர்ச்சியைக் கொண்டு மும்பை மக்கள்தொகை 4.1 சதவிகிதமாக உயர்கிறது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

69) நகர்புற விளிம்பு தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) நகர்ப்புறவிளிம்பு என்பது நன்குஅறியப்பட்ட நகர்புறப் பயன்பாடுகள் காணப்படும் நிலத்திற்கும், வேளாண் தொழிலுக்காக ஒதுக்கப்பட்ட நிலத்திற்குமிடையில் உள்ள மாற்றம் (transition) நிகழும் பகுதியாகும்.

ii ) இப்பகுதியில் கிராம மற்றும் நகர நிலப் பயன்பாடுகள் கலந்திருப்பதோடு கிராம நிலப்பயன்பாடு நகர நிலப்பயன்பாடாகவும் மாறி வருகிறது.

iii ) முக்கிய மாநகரத்தோடு அதன் தொடர்ச்சியான நகராட்சி நகரங்கள்மற்றும்முழுவதும் நகரமயமானவருவாய் கிராமங்கள் ஆகியவை நகர விளிம்பில் அடங்கும்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

70) நகர்ப்புற விரிவாக்கம் தொடர்பான கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) புறநகர் விரிவாக்கம் என்பது பொதுவாக மோட்டார் வாகனத்தை மட்டும் சார்ந்த குழுக்கள் வாழும் பகுதியில் மக்கள் தொகை விரிவாக்கம் நடைபெறுவதை விவரிக்கிறது.

(ii) நகரமயமாதலின் ஒரு வடிவத்தை விளக்க முற்படுவதோடு நகர்ப்புற விரிவாக்கம் என்ற சொல் வளர்ச்சியின் காரணமாக ஏற்படும் சமூக, சுற்றுச்சூழல் விளைவுகளை விளக்குகிறது.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

71) 'நகர்ப்புறமயமாக்கல் (Peri Urbani Sation) என்ற சொல் எந்த கண்டத்தில் பயன்படுத்தப்பட்டு வந்தது?

a) ஐரோப்பா

b) ஆசியா

c) ஆப்பிரிக்கா

d) வட அமெரிக்கா

72) நகர்ப்புற விரிவாக்கத்திற்கு காரணமான காரணிகளை தேர்ந்தெடு.

i ) குறைவான நில வீதங்கள்

ii ) நகர்புறத் திட்டமின்மை

iii ) வாழ்க்கைத்தரம் உயர்தல்

iv ) குறைவான வீட்டு வரி வீதங்கள்

a) i ), ii ), iii ), iv )

b) i ), ii ), iii )

c) ii ), iii ), iv )

d) iii ), iv )

73) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) குறைவான போக்குவரத்து நெரிசல் மற்றும் அமைதியான சூழல் ஆகியவற்றை மக்கள் விரும்புவதால் அவர்கள் விளிம்பை நோக்கி நகருகிறார்கள்.

ii ) கட்டுக்கடங்காத வளர்ச்சி, மரங்களை வெட்டுதல், பசுமைப் பரப்பு இழப்பு, நீண்ட போக்குவரத்து நெரிசல்கள், மோசமான உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவை மக்களைப் புதிய இடங்களுக்குச் செல்ல கட்டாயப்படுத்துகின்றன.

iii ) மாநகரங்களில் வழக்கமாக சொத்துவரிகள் அதிகமாக இருப்பதால் இதைத் தவிர்க்க மக்கள் நகர் பகுதிகளில் வாழ முற்படுகின்றனர்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

74) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) ஒரு மாநகரத்தின் மக்கள்தொகை அதன் தாங்கும் திறனைவிட அதிகமாக உள்ளதால் அங்கு வாழும் உள்ளூர் சமூகங்கள் மாநகரின் மையத்திலிருந்து மேலும் மேலும் தூரமாகச் செல்கின்றன.

ii ) மிகுந்த மக்கள் தொகை கொண்ட மாநகரங்களில் பெரிய வீடுகள், அதிக எண்ணிக்கையில் படுக்கையறைகள், பெரிய பால்கனிகள் மற்றும் பெரிய புல் தரைகள் ஆகிய வசதிகள் இல்லாததால் நகர்ப்புற விரிவாக்கம் ஏற்படக் காரணமாகிறது.

iii ) மக்களின் விருப்பத்திற்கேற்ப எங்கு வீடு கிடைக்கிறதோ அத்தகைய குறைந்த மக்கள் அடர்த்தி கொண்ட குடியிருப்புப் பகுதிகளையே மக்கள் பொதுவாகத் தேடிச் செல்கின்றனர்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

75) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) சீனாவிற்கு அடுத்தபடியாக உலகிலேயே இரண்டாவது அதிக நகர்ப்புற மக்கள் கொண்ட நாடு இந்தியாவாகும்.

ii ) இந்தியாவில் நகர்ப்புற மக்கள் தொகையானது (மொத்த மக்கள் தொகையில் சுமார் 28%) கிட்டத்தட்ட அமெரிக்க ஐக்கிய நாட்டின் மொத்த மக்கள் தொகைக்குச் சமமானதாகும்.

iii ) பெரிய எண்ணிக்கையில் மக்கள் மிகப்பெரிய மற்றும் பெரிய நகரங்களுக்கு (Metropolitan) வருவதால் நகர்ப்புற இந்தியாவின் மக்கள் தொகை வருடத்திற்கு 25 சதவீதத்திற்கும் மேலாக அதிகரிக்கிறது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

76) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) இடம் மற்றும் குடியிருப்பு வசதி பற்றாக்குறை இயற்கை மற்றும் புவியியல் தடைகளால் வளர்ந்து வரும் மக்கள் தொகைக்குத் தேவையான அதிக இடம் எளிதில் கிடைப்பதில்லை.

ii ) இடப்பற்றாக்குறை காரணமாக நிலத்தின் விலை அதிகரிப்பதுடன், அலுவலகம் மற்றும் குடியிருப்புகளின் வாடகை அதிகரிக்கிறது.

iii ) மக்களால் அதிக வாடகை கொடுக்க முடியாததால் நகரக் குடிசைகளின் தேவையற்ற வளர்ச்சி ஏற்படுகிறது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

77) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) ஒரு மதிப்பீட்டின்படி இந்திய நகரங்களில் வருடத்திற்கு சுமார் 2 மில்லியன் வீடுகளின் பற்றாக்குறை ஏற்படுகிறது.

ii ) குறைந்த வருவாயுள்ள மக்கள் குழுக்கள் நகரக் குடிசைகளிலும், நடைபாதைகளிலும் வாழும் நிலைமைக்குத் தள்ளப்படுகின்றனர்.

iii ) இந்தியாவின் பெரிய நகரங்களில் நகரக் குடிசைகள் மற்றும் நடைபாதைகளில் வாழ்பவர் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

78) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) இந்தியாவின் பெரும்பான்மையான மாநகரங்களில் வளர்ச்சி காணப்படுகிறது, ஆனால் நகரமயமாதல் நடைபெறவில்லை.

ii ) உண்மையில், மக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள வேளையில் உட்கட்டமைப்பு வசதிகளும், குடிமை வசதிகளும் போதுமானதாக இருக்கின்றன.

iii ) நகர்ப்புற இடங்களில் மக்கள் குவிந்துள்ளதால் சமூக அடிப்படை வசதிகள் போன்றவை அதிக அழுத்தத்திற்கு ஆளாகின்றன.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

79) வேலையின்மை தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு.

i ) வேலையின்மை என்பது கட்டாயமாக வேலையற்று இருப்பதாகும்.

ii ) இந்தியாவில் வருடத்திற்கு 10 சதவீதத்திற்கும் அதிகமான நகர்ப்புற வேலையின்மை படிப்படியாக உயர்ந்து வருகிறது.

iii ) ஒரு மதிப்பீட்டின்படி சுமார் 25% நகர்ப்புறத் தொழிலாளர்கள் வேலையின்றி இருக்கின்றனர்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

80) போக்குவரத்து பிரச்சனை தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) போக்குவரத்துச் சிக்கல்கள் மற்றும் போக்குவரத்து நெரிசல் ஆகியவை இந்திய மாநகரங்களின் முக்கியப் பிரச்சனையாகும்.

ii ) எதிர்பாராதவிதமாக, பெரிய நகரங்களில் குறிப்பாகப் பழைய நகரங்களில் சாலைகள் அகலமாக காணப்படுகின்றன.

iii ) எனவே பயணிகளின் அதிகரித்து வரும் தேவையை சமாளிக்க முடியவில்லை.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

81) தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) பொதுத்துறை வாகனங்களின் எண்ணிக்கை திடீரென அதிகரித்து வருவதன் விளைவாக போக்குவரத்து நெரிசல், தாமதம், எரிச்சல் மற்றும் பதற்றம் போன்றவை ஏற்படுகிறது.

ii ) சாலைகளை அகலப்படுத்தாமல், சாலைகளின் தரத்தை மேம்படுத்தாமல் வாகனங்களின் எண்ணிக்கையைத் தற்போதுள்ள வீதத்தில் அதிகரிக்க அனுமதித்தால் முக்கிய மாநகரங்களில் உள்ள போக்குவரத்து அமைப்பு முழுவதும் சரிவடையும்.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

82) எரிசக்தி நெருக்கடி தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) எரிசக்தி நெருக்கடி தொழிற்சாலைப் பொருட்களின் உற்பத்தியையும் விநியோகத்தையும் பாதிக்கிறது.

ii ) உண்மையில் எரிசக்தியானது தொழில் வளர்ச்சி, போக்குவரத்துத் திறன் மற்றும் மனித வசதியைச் சார்ந்துள்ளது.

iii ) பெருநகரங்கள், மில்லியன் மற்றும் முதல் நிலை நகரங்கள் ஆகியவற்றில் உச்சகட்ட மின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. அதற்கேற்றவாறு எரிசக்தியின் அளிப்பு தேவையை பூர்த்தி செய்யும் நிலையில் உள்ளது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

83) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) மனித வாழ்க்கையின் முதல் மற்றும் முன்னணித் தேவை நீர்.

ii ) கொல்கத்தாவில் சராசரி தனிநபரின் நீர் நுகர்வு 250 லிட்டர், மும்பையில் 175 லிட்டர், டில்லியில் 80 லிட்டர் மட்டுமே.

iii ) வாடிகனில் இது 1200 லிட்டர், சிக்காகோவில் 1100 லிட்டர் ஆகும்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

84) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) சென்னை, ஹைதராபாத், ஜெய்ப்பூர், ஜோத்பூர், நாக்பூர், சிம்லா, சோலன், சூரத், உதய்பூர், வதோதரா போன்ற நகரங்களில் நாளொன்றுக்கு ஒன்று முதல் இரண்டு மணி நேரமே நீர் வழங்கப்படுகிறது

winmeen.com

(ii) தேசிய தலைநகர்புதுடெல்லியும்நீர்அளிப்பு நாளொன்றுக்கு சுமார் 3 மணிநேரம் என்று முறைப்படுத்தியுள்ளது.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

85) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) சுற்றுச்சூழல் மாசுபடுதலானது அனைத்து மில்லியன் மற்றும் பெரு நகரங்களின் தீவிரப் பிரச்சினையாகும்.

(ii) குப்பை சேகரிக்கும் இடங்களின் பற்றாக்குறை கிராம–நகர விளிம்பை சுகாதாரமற்றதாக ஆக்குவதுடன் மக்கள் உடல் நலத்திற்குப் பாதகமாகவும்ஆகிறது.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

86) பின்வருவனவற்றுள் குப்பைகளின் பெரும்பகுதி தொடர்ந்து கடலில்கொட்டப்படும் மாநகரங்கள் எவை?

a) மும்பை

b) கொல்கத்தா

c) சென்னை

d) இவை அனைத்தும்

87) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) அதிகரிக்கும் நகர்ப்புறக் குற்றங்கள் நவீன நகரங்களின் அமைதியைக் குலைக்கின்றன.

(ii) சமூகவியலாளர்கள் கூற்றுப்படி நீர்ப்பற்றாக்குறை நகர்ப்புற பகுதிகளில் குற்றங்களுக்கு முக்கிய காரணமாகும்.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

88) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) நகரக் குடிசைகள் வேலையில்லாத குற்றவாளிகளால் நிறைந்திருக்கின்றன.

(ii) வளர்ந்து வரும் நுகர்வுத்தன்மை, சுயநலம், கடினமான போட்டி, ஆடம்பரமாக செலவு செய்யும் பழக்கம், அதிகரித்து வரும் சமூகப் பொருளாதார வேற்றுமைகள், ஆகியவை இப்பிரச்சனைக்குச் சில முக்கியக் காரணங்களாகும்.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

89) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) பாலைவனத்தில் ஒரு பசுமையான இடம் பாலைவனச் சோலை ஆகும்.

ii ) நாட்டுப் புறமாக இருந்த பகுதியில் நகர்ப்புறக் கட்டிடங்களும் வீடுகளும் பரவுதல் நகர்ப்புற விரிவாக்கம்.

iii ) மத்தியப் பகுதியின் கட்டப்பட்ட பகுதி மற்றும் ஏதாவது புறநகர் ஆகியவற்றை உள்ளடக்கிய நகர்புறத்தின் நீட்டிப்பு மற்றும் தொடர்ந்த நகர்ப்புறப்பகுதி மூலம் தொடர்பு படுத்தப்பட்டது ஒருங்கிணைப்பு.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

90) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) பொருளாதாரத்திற்குத் தேவையான சக்தி வளங்களைத் தருவதில் ஏற்படும் முக்கியமான சிக்கல் ஆற்றல் சிக்கல்.

ii ) ஒரு நகர்ப்புற பகுதி பலவிதமான மின்னணு தகவல்களைச் சேகரிக்கும் நுண்ணுணர்வுகளைப் (Sensors) பயன்படுத்தி தகவல் அனுப்பி, சொத்துக்களையும், வளங்களையும் திறமையாகக் கையாளும் பகுதி ஸ்மார்ட் சிட்டி.

iii ) புவியின் மேற்பரப்பின் காணும் இடம் தலம்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )